


"அப்ப இந்தத் தேர்தலில் யாரனை தன்ர தலையில தானே மண் அள்ளிக்கொட்டப்போகுது பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 153

சனிக்கிழமை
27 ஏப்ரல் 2024

சித்திரை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



## தேர்தல் 'ரேஸில்' ரணில் உறுதி!

கொழும்பு, ஏப். 27
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக்

11



### வடக்கில் முதன்முறையாக
## 'ட்ரோன்' ஊடாக கிருமிநாசினி விசிறல்

மன்னார், ஏப். 27
வடக்கில் முதன்முறையாக நானாட்டான் வஞ்சியக் குளக் கண்டத்தில் 'ட்ரோன்' மூலம் கிருமிநாசினி விசிறும் நடவடிக்கை நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எம்.ஜ.-7 பய

11

## வடக்கு-கிழக்கில் உயரும் வெப்பம்

→03

## மத்தள விமான நிலையம் இந்தியா – ரஷ்யாவுக்கு?

கொழும்பு, ஏப். 27
வெள்ளையானைத் திட்டம் என வர்ணிக்கப்படும் மத்தள விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை இரண்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.
இந்த விமான நிலைய முகாமைத்துவத்துக்கு ஐந்து நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு 30 வருடங்களுக்கு வழங்க அமைச்

11

### 5 ஆண்டுகால விடுமுறை பெற்றவர்கள் உள்ளடங்கலாக
# வடக்கில் மட்டும் 763 பேர் அரச சேவையிலிருந்து விலகல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27
வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டில் மாத்திரம் 763 அரச பணியாளர்கள் தங்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர். இவர்களில் 5 ஆண்டுகால விடுமுறையைப்பெற்று 720 பேர் விலகியுள்ளனர். அத்துடன் 36 பேர் எந்தவொரு அறிவித்தலும் இல்லாமலும் 7 பேர் உரிய அறிவித்தலுடனும் சேவைகளிலிருந்து விலகியுள்ளனர்.

11



## முறிகண்டியில் விபத்து: சிப்பாய் உயிரிழப்பு

### பலருக்கு காயம்

முல்லைத்தீவு, ஏப். 27
முறிகண்டியில் நேற்றுக்காலை 6 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன் 7 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து ஏ - 9 பிரதான வீதியில் முறிகண்டி வசந்தநகர் சந்தியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பார ஊர்தியை, அதே திசையில் பயணித்த இராணுவ 'கப்'ரக வாகனம் முந்த முற்பட்டுள்ளது.

11

## குடும்பத் தகராறால் இளம்பெண் சாவு?

பருத்தித்துறை, ஏப். 27
குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக தவறான முடிவு எடுத்த நிலையில் காப்பாற்றப்பட்ட இளம் குடும்

11

### நாச்சிக்குடா அரசினர் த.க. பாடசாலை
## பெயரில் மாற்றமில்லை!

**கல்வித் திணைக்களம் பணிப்பு**

யாழ்ப்பாணம், ஏப். 27
கிளிநொச்சி நாச்சிக்குடாவில் தற்பொழுது பெயர்ச் சர்ச்சையில் சிக்கியுள்ள 'நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின்' பெயரில் எந்த மாற்றமுமில்லை. அதே பெயரையே உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்துமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் 'உதயன் பத்திரிகைக்கு' தெரிவித்தார். பாடசாலையின் தற்போதைய அதிபர், நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற இறப்பர் முத்திரையைப்


11

### நாடாளுமன்றில்
## எதிர்ப்பு பதாகைகளை மீட்டது அதிரடிப்படை

கொழும்பு, ஏப். 27
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக அரசாங்கத்தை விமர்சிக்கும் பதாகைகள் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேசைகளின் கீழ் வைக்கப்பட்டிருந்த

11

## முகமாலையில் எலும்புக்கூடு மீட்பு



யாழ்ப்பாணம், ஏப். 27
முகமாலையில் கண்ணிவெடி அகற்றும்போது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவற்றை கிளிநொச்சி

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணியில் பொது இணக்கப்பாடு உள்ளதா?



## ஜே.வி.பி.யின் தலைவர் அநுர சந்தேகம்

**கொழும்பு, ஏப். 27**

**பாதுகாப்புத் தரப்பினரதும், தாக்குதல்தாரிகளினதும் பொது இணக்கப்பாட்டுடன் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது - என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விவாதிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியாக 9 நாள்கள் விவாதிக்கப்பட்டது. இருப்பினும் இன்றுவரைநீதிகிடைக்கவில்லை. ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் சனல் - 4 ஆவணப்படம் வெளியாகியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ராஜபக்சக்களின் அரசியல் செயற்பாடுகள் முஸ்லிம் அடிப்படைவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம், சிங்கள இனத்துக்கு அச்சுறுத்தல் என்பதை மையப்படுத்தியிருந்தது. உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல் இதன் உச்சகட்டம். குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னரே 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெறுபேறு எழுதப்பட்டது.

குண்டுத்தாக்குதலுக்கு அப்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ம)

## ஆஸ்துமா பாதிப்பில் இலங்கை முன்னிலை



கொழும்பு, ஏப். 27

உலகில் ஆஸ்துமா நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது என்று இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மொத்த சனத்தொகையில் 10 முதல் 15 சதவீதமானவர்கள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆஸ்துமா நோயை உரிய முறையில் கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது மரணத்துக்குக் கூட வழிவகுக்கும் என்று இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)





## தந்தை செல்வாவின் நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், ஏப். 27

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுவின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 47ஆவது நினைவேந்தல் நிகழ்வும் நினைவுப் பேருரையும் நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவிட வளாகத்தில், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுவின் தலைவர் ஓய்வுநிலை ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் திணைக்கள பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், 'இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புகளும், சவால்களும்' என்னும் கருப்பொருளில் உரையாற்றினார்.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் உபதலைவர் குலநாயகம், தமிழரசுக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சோ.மாவை சேனாதிராஜா, வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

அதேவேளை, தந்தை செல்வாவின் 47ஆவது நினைவுதினம் தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வவுனியாவிலும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. வவுனியா மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகிலுள்ள தந்தை செல்வாவின் சிலையருகில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ம- 27-110)



## கல்வியியற் கல்லூரிகளுக்கு 60,000 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

கல்வியியற் கல்லூரிகளுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்காக 60 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அதேவேளை கல்வியியற் கல்லூரி பயிற்சி முடித்த 4 ஆயிரத்து 160 பேர் கல்லூரிகளை விட்டு வெளியேறவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான ஊதியம் தருக

*இல்லையேல் பதவிவிலகுவேன் வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 27

மே முதலாம் திகதி பெருந்தோட்ட மக்களுக்கு நியாயமான சம்பள உயர்வை அரசாங்கம் அறிவிக்கும் என நம்புகிறேன். அவ்வாறு சம்பள அதிகரிப்பு இடம்பெறாவிட்டால் அனைத்துப் பதவிகளையும் துறந்து மக்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடி, அந்த உரிமையைப் பெற்றுக்கொள்வோம் என வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (ம)

## தரமற்ற அரிசிக்கு அரசு பொறுப்பல்ல

*கல்வியமைச்சர் கைவிரிப்பு*

கொழும்பு, ஏப். 27

பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் சிறுவர்களின் நுகர்வுக்கு தகாத அரிசியானது உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்டதே தவிர, அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த அரிசிப் பொதிகள் உலக உணவுத் திட்டத்தால் மேலதிகமாக வழங்கப்பட்டவை. அரச நிதியில் விநியோகிக்கப்படும் உணவு குழந்தைகள் உண்பதற்கு ஏற்றது என்பதை அரசு உறுதி செய்கிறது - என்றார். (ச-இ)

## சு.க.வின் செயலராக துமிந்த நியமனம்

கொழும்பு, ஏப். 27

சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில் அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளராக துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக துஷ்மந்த மித்ரபால செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்த நிலையிலேயே துமிந்ததிஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் வெப்பம் உயரும்!

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 27

**வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது காணப்படும் அதிகரித்த வெப்பநிலை இந்த மாதத்தின் இறுதி நாள்களிலும், அடுத்த மாதத்தின் ஆரம்ப நாள்களிலும் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார். வெப்ப அலைச் சுட்டெண்ணின் ஆபத்தான வகைப்பாட்டுக்குள் நாம் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பகல் பொழுதின் அதிகூடிய வெப்பநிலை 40 பாகை செல்சியஸுக்கு மேலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் காலத்தில் உணரக்கூடிய வெப்பநிலையின் அளவு உண்மையான வெப்பநிலையைவிடவும் உயர்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



கடந்த சில நாள்களாக இரவுப் பொழுது வளிமண்டல சாரீரப்பதனின் அளவு உயர்வாகவுள்ளது. இது எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, எமது நீர்ப் பயன்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வது சிறந்தது - என்றார்.

(ம-66)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு: இவ்வருடம் 1,371 முறைப்பாடு

இந்த ஆண்டின் 4 மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக ஆயிரத்து 371 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

முறையான அனுமதியின்றி வெளிநாட்டு வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல், சரியான வேலை உத்தரவு இல்லாமல் வெளிநாட்டு வேலைகளை வழங்குவதற்காக பணம் வசூலித்தல், சுற்றுலா விஸா மூலம் வெளிநாட்டு வேலைகளுக்கு மக்களை வழிநடத்துதல் போன்ற முறைப்பாடுகளே பணியகத்துக்குக் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

## மோட்டார்சைக்கிள் தீக்கிரை: சண்டிலிப்பாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் தீக்கிரையான சம்பவம் தொடர்பில், சந்தேகநபர் ஒருவரை மானிப்பாய் பொலிஸார் சண்டிலிப்பாய் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர். புலனாய்வுத் தகவல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே 32 வயதான அந்தச் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ம-125)

## திருமறைக் கலாமன்ற வெள்ளி விழா நாளை

யாழ்ப்பாணம், ஏப். 27

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள், இளவாலையில் அமைந்துள்ள கலைத்தூது கலைக்களரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் செ.பியன்வெனு தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், யாழ்.பல்கலைக்கழக சேர். பொன். இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடாதிபதி சா.சிவரூபன், கௌரவவிருந்தினராக திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ப)

## உடைமையில் கசிப்பு குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைவாக 56 வயதான சந்தேகநபரை ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப்பகுதியில் வைத்து கைது செய்த பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-125)

## காலாவதி பொருள்கள் ரூபா 40,000 தண்டம்

யாழ்.சுழிபுரம் பகுதியில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, உரிய சுகாதார நடைமுறையைப் பின்பற்றாமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின்போது தன் மீதான குற்றத்தை வர்த்தகர் ஏற்றுக்கொண்ட நிலையில் குறித்த வர்த்தகரை கடுமையாக எச்சரித்த நீதிவான் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தும், கைப்பற்றப்பட்ட காலாவதியான பொருள்களை அழிக்கவும் உத்தரவிட்டார்.

(ம-66)

## தினம் தெரியுமோ?

தங்க இடம் குடுத்தால் மடம் பிடிக்கிறது எங்கட ஆக்களுக்கு கைவந்த கலை. தொட்டுத் தொடரும் இந்தக் கெட்ட பாரம்பரியம் பற்றி ஒரு கதையை இப்ப பாப்பம்.

1986ஆம் ஆண்டு இஞ்சகடும் பிரச்சினையெண்டு யாழ்ப்பாணம் நல்லூரடியில இருந்த ஒரு குடும்பம் கனடாவுக்கு வெளிக்கிட்டிருக்கினம். தாங்கள் இருந்த வீட்ட தங்களுக்குத் தெரிஞ்ச ஆக்களைப் பராமரிக்கச் சொல்லிப்போட்டு அவை கனடா போட்டினம். மூண்டு வருசம் அவையும் நல்லாப் பராமரிச்சுக்கொண்டு வந்தவை. அப்ப வீட்டுச் சொந்தக்காரரின் தம்பி கலியாணம் கட்டிப்போட்டு, 'அண்ணை இருக்க இடமில்லாமல் நானும் மனுசியும் கஷ்டப்படுறம். ஒரு நல்ல வீடு கிடைக்கும் வரைக்கும் உங்கட வீட்ட இருக்கட்டுமோ? ' எண்டு 1989 இல கனடால இருந்த அண்ணையிட்டக் கேட்டிருக்கிறார். தம்பிக்கு இல்லாத வீடா? எண்டு அண்ணையும் இருக்கச்சொல்லிட்டார். அவ்வளவுதான். 'இந்தா போறம், அந்தா போறம்' எண்டு ஒவ்வொரு சாட்டுச் சொல்லிச் சொல்லியே தம்பி குடும்பம் அந்த வீட்டை விட்டு அசையவே இல்லை. இதுக்கெல்லாம் காரணம், தம்பியாரின் துணைவியார் தான். அவான்ர 'யோகமோ' என்னவோ கனகாலமா கனடாக்காரர் ஊர்ப்பக்கம் வரவே இல்லை. கனடாக்காரரின்ர தம்பி நல்லூர் வீட்டில செத்த பிறகு, அவரின்ர துணைவி கனடாக்காரரோட எல்லாத் தொடர்பையும் 'கட்' பண்ணிப்போட்டா. காலம் முழுக்க அந்த வீட்டை தாங்களே ஆளலாம் எண்டதுதான் அவான்ர பிளான்.

ஆனால் அடுத்தவன் வீட்டை எவ்வளவு நாளைக்குத்தான் ஆட்டையைப் போட்டு வைச்சிருக்க ஏலும்? கனடா அண்ணையின்ர துணைவி, தன்ர தங்கச்சியை ஊருக்கு அனுப்பி நிலைமையைப் பார்த்திருக்கிறா. ஆனால் அப்பிடி வந்தவையை வீட்டுக்குள்ளயே விடேலையாம். அதுக்குப் பிறகுதான் அவை உசாராகி, அந்த வீட்டுக்கு முன்னால போராட்டம் எல்லாம் நடத்திப் பார்த்திருக்கினம். அப்பவும் வீட்டை அடாத்தாப் பிடிச்சு வைச்சிருக்கிறவை கதவைத் திறக்கேலையாம். அதுக்குப் பிறகு 31.03.2024 இல பொலிஸில கேஸ் போட்டிருக்கினம். வீட்டைப் பிடிச்சு வைச்சிருக்கிற அந்த 'யோகக்கார' அம்மாவை பொலிஸ் கூப்பிட்டு விசாரிக்க 'நாங்கள் எப்பவோ அந்த வீட்டை வாங்கிட்டம், ஆனால் உறுதி என்னட்ட இல்லை. லோயரிட்டத்தான் இருக்கு' எண்டு சொல்லிப்போட்டு வந்திட்டாவாம். ஆனால் பகிடி என்னெண்டால் அந்த வீட்டின்ர உறுதி இன்னும் வேற பேருக்கு மாத்துப்படேலை. அதோட இவ்வளவு காலமும் வீட்டின்ர உண்மையான உரிமைக்கார ஆக்களின்ர பேரில தான் சோலைவரியும் கட்டுப்பட்டிருக்கு. அதால இப்ப வீட்டின்ர உரித்துக்காரர் வழக்குப் போடிருக்கினமாம். எப்பிடியும் வழக்கு நாலைஞ்சு வருசம் இழுபடும், அதுமட்டும் அந்த வீட்டில அந்த யோகக்கார அம்மா இருக்கலாம்.

இப்பிடி அந்த வீட்டை ஆட்டையைப் போட்ட அம்மா ஆரெண்டு நினைக்கிறியள்? மேயரா இருந்த அதே யோகக்கார அம்மாதான். சும்மா சொல்லக்கூடாது அவாக்கு கடும் யோகம் தான். இல்லாட்டி வீடு, பதவி எல்லாமே அவாக்குஇப்பிடி ஈஸியா கிடைச்சிருக்குமோ? ஆட்டையப் போட்ட வீட்டில இருந்துகொண்டே, வீணை வாசிச்ச படி அந்த மாநகரத்தை ஆளுற அதிருஷ்டமெல்லாம் எல்லாருக்கும் வாய்க்குமோ? இந்த மோசடி பற்றி, அந்த யோகக்கார அம்மாவின்ர கட்சித் தலைவருக்கும், வீட்டு ஓனர் 'ஈமெயில்' அனுப்பினவராம். அதுக்கு ஒரு பதிலுமே இல்லையாம். எப்பிடி பதில் போட ஏலும்? இவாவாவது வீட்டை ஆட்டையைப் போட்டா, அவர் ஒரு தியேட்டரையே ஆட்டையைப் போட்டவரெல்லோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி : புதுவருடப் பலன்கள்






சிறு உளிதான் பெரிய மலையை உடைக்கும் என்ற சூட்சுமத்தை உணர்ந்த நீங்கள், சின்ன மீனை போட்டு பெரிய மீனை பிடிப்பவர்கள். ராசிக்கு 7ஆம் வீட்டில் குரோதி வருடம் பிறப்பதால் உங்களுடைய அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

இந்தாண்டு பிறக்கும் நேரத்தில் சுக்ரனும், புதனும் சாதகமாக இருப்பதால் வீராவேசமாகப் பேசி விமர்சனங்களுக்குள்ளாவதைவிட கனிவாகப் பேசி எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். பணப்பற்றாக்குறையை போக்க கூடுதலாக உழைப்பீர்கள்.

வருடப் பிறப்பு முதல் 30.04.2024 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு பூர்வ புண்ய ஸ்தானமான 5 ஆம் வீட்டில் நிற்பதால் மனதில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும்.

01.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு உங்கள் ராசிக்கு 6இல் மறைவதால் மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். சில நேரங்களில் வாழ்க்கை மீது ஒருவித வெறுப்புணர்வு ஏற்படக்கூடும்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டிலேயே இந்தாண்டு முழுக்க முகாமிட்டிருப்பதால் சவாலில் வெற்றி பெறுவீர்கள். தொலைநோக்குச் சிந்தனை அதிகமாகும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும். துணிச்சலாக சில பிரதான முடிவுகளெல்லாம் எடுப்பீர்கள்.

01.05.2024 முதல் குரு உங்கள் ராசிக்கு 6இல் அமர்வதால் உத்தியோகத்தில் பொறுப்பு அதிகமாகும்.

இந்தப் புத்தாண்டு உங்களைக் கொஞ்சம் செம்மைப்படுத்துவதற்கு உதவுவதுடன், சமூகத்தில் வளைந்துக் கொடுத்துப்போகும் கலையைக் கற்றுத் தருவதாக அமையும்.




# அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, ஏப்.27

வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைகள் சங்கத்தினரால், வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

போக்குவரத்துக் கொடுப்பனவை ரூபா 7 ஆயிரத்து 500 ஆக அதிகரித்து வழங்கு, வெளிக்களத்தில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவானது எங்களுக்கும் அதிகரிக்கப்படவேண்டும் எனப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ப-110)

# வீட்டில் கள் விற்ற மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.27

வீட்டில் வைத்துக் கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று வீடுகளில் இருந்து 6 லீற்றர் 250 மில்லிலீற்றர், 14 லீற்றர் 750 மில்லிலீற்றர், 9 லீற்றர் 750 மில்லிலீற்றர் ஆகிய அளவுடைய 'கள்' மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (எ-125)


# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டுக் காரியாலயம் முன்பாக கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் முன்னெடுத்த சிறப்புச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து ஒரு கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.27

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் தொல்புரத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது என்றும், சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)



மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கி இணைந்து முன்னெடுத்த தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இந்தமுறை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு, கிளிநொச்சி [illegible] மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-59)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டியநாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முருகப் பெருமானை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி உண்டாகும். காரியம் அனுகூலமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். நற்பலன்கள் அதிகரிக்கும். இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக்கசப்புகள் நீங்கும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாக முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது அவசியம். முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அம்பிகையை வழிபட சிரமங்கள் நீங்கும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகாவிஷ்ணுவை வழிபட, மகிழ்ச்சி கூடுதலாகும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எதுவும் எடுக்கவேண்டாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்கவும். ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு. திடீர் செலவுகளும் ஏற்படும். விநாயகரை வழிபட புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# இன்னும் எத்தனை காலம்தான்....?

முஸ்லிம்களுக்கு எதிராக ராஜபக்சக்கள் முன்னெடுத்த அரசியல் பரப்புரைகளின் உச்சக்கட்டமாகவே உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா? என்று நாடாளுமன்றத்தில் வைத்து வினவியிருக்கின்றார் ஜே.வி.பி.யின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க. அத்துடன், பாதுகாப்புத் தரப்பினரதும், தாக்குதல்தாரிகளினதும் பொது இணக்கப்பாட்டுடன்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதா? சனல்-4 ஊடகத்தின் ஆவணப் படம் மற்றும் ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடையதாக உள்நாட்டில் வெளியிடப்படும் கருத்துகளை அடிப்படையாக வைத்து இன்னமும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை ஏன்? என்றும் அவர் கேள்விக்கணைகளை அடுக்கியிருக்கின்றார்.

இலங்கையை ஆட்சிசெய்த அரசாங்கங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எப்போதும் இனவாதம், சிறுபான்மையினருக்கு எதிரான கருத்தியல் என்பவற்றையே பெரும்பான்மை மக்களின் வாக்குகளை கபளீகரம் செய்யும் ஆயுதங்களாகக் கொண்டிருக்கின்றன. நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்தபோது, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தின் ஊடாக தெற்கு அரசியல்கட்சிகள் வாக்கு வேட்டை நடத்தின. போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் மீட்பர்களாகத் தங்களை அடையாளப்படுத்தி கோலோச்சிய ராஜபக்சக்கள் மீதான அபிமானம் குறைந்து, அதிகாரம் பறிபோயிருந்த சந்தர்ப்பத்திலேயே நாட்டை -உலகை -உலுக்கிய உயிர்த்தஞாயிறு கொடூரத் தாக்குதல்கள் இலங்கையில் அரங்கேறியிருந்தன.

ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப் பட்டன என்பதை சில சாட்சியாளர்களின் கருத்துகளுடன் வெளிப்படுத்தியிருந்தது 'சனல்-4'. ராஜ பக்சக்களுக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள், புலனாய்வு அதிகாரிகள் என்போரின் ஒத்துழைப்புடன் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று சனல் - 4 ஊடகத்தில் கருத்துத் தெரிவித்த அந்தச் சாட்சியாளர்கள் தெரிவித்திருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் நாட்டின் அதியுயர் பதவி களில் இருப்பவர்களின் மறைகரங்கள் உள்ளன என்று பல தரப்புகளும்-குறிப்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோர் தொடர்ச் சியாக கூறிவந்தனர். எனினும், இந்தக் கருத்து களையெல்லாம் ஒருபுள்ளியில் இணைத்து கனதியான விசாரணையொன்று, தாக்குதல் நடந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள போதும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

பதவியைக் கைப்பற்றுவதற்காகவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்ற சதியில் நாட்டு மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டிருக்குமானால் அதைப் போன்றதொரு மோசமான செயல் வேறொன்றும் இல்லை. அரசாங்கம் மீண்டும் விசாரணை, ஆணைக்குழு என்று சாக்குப்போக்குக் கூறிச் சமாளிக்காது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் பகிரங்கப்படுத்தவேண்டும். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயர்மட்டத்தில் உள்ள பலர் தொடர்புகளைக் கொண்டுள்ளனர் என்று சொல்லப்படும்நிலையில், விசாரணையில்கண்டறியப்பட்ட தகவல்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஆனால், ராஜபக்சக்களின் நிழலில் பதவிச்சுகம் கண்டுகொண்டிருக்கும் ஜனாதிபதி ரணிலோ அவரது அரசாங்கமோ இவற்றையெல்லாம் செய்யப்போவதில்லை என்பதே யதார்த்தம்...!






## முதலாவது காலாண்டில் அரச வருமானம் உயர்வு

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

**கொழும்பு, ஏப். 27**

**இந்த வருடத்தின் முதல் காலாண்டில், அரச வருமானம் 834 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்துக்கு மேலதிகமான 6 வீத வளர்ச்சியாகும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் பொருளாதார நிலைப்பாடு தொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு வருமான இலக்குகளை எட்டக்கூடிய ஆண்டாக அமையும். தற்போதைய சட்டத்தின்படி கடன் பெறவும், பணத்தை அச்சிடவும் முடியாமலிருப்பதே அதற்குக் காரணமாகும். 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டை 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மீள் கட்டமைப்புச் செலவுகள் 35 வீதமாக அதிகரித்துள்ளன. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 787 பில்லியன் ரூபா அரச வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாம் 834 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## உலகப்பொருளாதாரப் பேரவை: சவூதி செல்கின்றார் அலி சப்ரி

கொழும்பு, ஏப். 27

உலக பொருளாதாரப்பேரவையின் உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வலுத்திறன் தொடர்பான விசேட கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சவூதி அரேபியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த விசேட கூட்டமானது உலகளாவிய ரீதியில் பல்துறைசார் பிரதிநிதிகளையும், தொழிற்றுறை தலைவர்களையும் ஒன்றிணைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## நாட்டில் பரவலாக வெப்பம் தொடரும்

கொழும்பு, ஏப். 27

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் அதிகரித்த வெப்பநிலை காணப்படுமென இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். காலி தொடக்கம் மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பிராந்தியங்களில்காலை வேளையிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## சிறைச்சாலைக்குள் இரகசியப் பொலிஸ்

கொழும்பு, ஏப். 27

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரைக்கமைய, சிறை வளாகத்துக்குள் நடந்து வரும் குற்றச்செயல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் நோக்கிலும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் இரகசியப் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## படிக்கட்டுப் பயணம் ரயிலில் இனித் தடை

ரயில் படிக்கட்டுகளில் நின்றபடி செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயணிகள் ரயில் படிக்கட்டுகளில் தொங்கியபடி பயணிப்பதால் விபத்துகள் பதிவாகின்றன என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### நாளை

28.04.2024

ஞாயிற்றுக்கிழமை

சித்திரை - 15

சுபநேரம் : 08.58 - 10.28

ராகுகாலம் : 04.28 - 05.58

### நாளொரு நல்வார்த்தை

**உங்களிடம் அறிவொளி இருந்தால்
அந்தத் தீபத்திலிருந்து
மற்றவர்கள் மெழுகுவர்த்திகளை
ஏற்றிக்கொள்ளட்டும்.**

**-கார்ல் மார்க்ஸ்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பா.ஜ.க.வின் வெற்றி கைநழுவிப் பலநாள்

*ராகுல்காந்தி கிண்டல்*

புதுடில்லி, ஏப். 27

இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கான வெற்றி கைநழுவிப் போய்விட்டதை பிரதமர் நரேந்திரமோடி நன்கு அறிந்துள்ளார். இதை அவரது பேச்சிலிருந்து உணரமுடிகிறது என காங்கிரஸின் மூத்த தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ருவிற்றர் வலைத்தளத்தில் கூறியுள்ளதாவது:-

காங்கிரஸ் கட்சியின் உத்தரவாதங்களுக்கும், பிரதமர் மோடியின் உத்தரவாதங்களுக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. தேர்தலில் வெற்றிபெறமாட்டோம் என்பது பிரதமர் மோடிக்கு நன்கு தெரியும். எங்களுடைய விவசாயிகளுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை சட்டபூர்வமாக மாற்றுவது போன்ற மக்கள் நலன்சார்ந்த திட்டங்களை மட்டுமே காங்கிரஸ் வாக்குறுதியாகத் தந்துள்ளது. ஆனால், மோடியின் உத்தரவாதம் என்பது அதானிகளின் இராஜ்ஜியத்துக்கானது. கோடீஸ்வரர்களின் பொக்கெட்டுகளில்தான் நாட்டின் செல்வம் அடைபட்டுள்ளது. அவர்களிடம் நன்கொடை என்ற பெயரில் அரசியல்வாதிகள் கோடிக்கணக்கில் பணம் வாங்கி ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்குகின்றனர் - என்றுள்ளது. (ம)



# விண்வெளியில் அணுவாயுதம்!

*வீட்டோவால் அடித்தது ரஷ்யா*

**வொஷிங்டன், ஏப். 27**

**விண்வெளியில் அணுவாயுதங்களைநிறுத்துவதற்குத் தடை விதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை, தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா ரத்துச் செய்துள்ளது.**

விண்வெளியில் அணுவாயுதங்களை நிறுத்தும் நடவடிக்கையில் அண்மைக்காலமாகவே ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இதற்கான தொழில்நுட்பம் தற்போதுவரை ரஷ்யாவிடம் மட்டுமே இருப்பதாகவும் கருதப்படுகின்றது. இந்த நிலையில், ரஷ்யாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில், விண்வெளியில் அணு ஆயுதங்களை நிறுத்தக் கூடாது என்றவொரு தீர்மானத்தை அமெரிக்காவும் ஜப்பானும் ஐ.நா. பாதுகாப்புச்சபையில் நேற்றுக் கூட்டாகக் கொண்டுவந்தன. இதை தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரஷ்யா ரத்துச் செய்துள்ளது.

'விண்வெளியில் பேரழிவு ஆயுதங்களை நிறுத்துவதைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் கடந்த 1967ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால் புதிதான உடன்பாடுகள் தேவையில்லை என்று ஐ.நா.வுக்கான ரஷ்யத்தூதுவர் வாஸிலி நெபன்ஸியா தெரிவித்துள்ளார். (ம)




# ரபாவில் தாக்குதல்கள்; இஸ்ரேல் முழுஆயத்தம்

டெல்அவிவ், ஏப். 27

ரபாவில் தாக்குதல் நடத்த அனைத்துப் பணிகளும் ஆரம்பித்துவிட்டன. அரசு ஒப்புதல் தந்தால் அடுத்த நொடியே தாக்குதல்தான் என்று இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளையடுத்து, சுமார் 15 இலட்சம் மக்கள் அகதிகளாக ரபாவுக்குள் அடைக்கலமாகியுள்ளனர். இதனால் ரபாவுக்குள் தாக்குதல் நடத்தினால் அது மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் என்பதால் அந்தத் தாக்குதல் நடவடிக்கையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இஸ்ரேல் இராணுவத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் எச்சரித்து வருகின்றது. ஆனால் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், தாக்குதலை நடத்துவது என்பதில் இஸ்ரேல் தீவிரமாகியுள்ளது. இந்த நிலையிலேயே, ரபாவில் ஹமாஸ் போராளிகள் பதுங்கியிருக்கலாம் என்று நம்பப்படும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அரசு ஒப்புதல் வழங்கினால் அடுத்த நொடியே மிகப்பெரும் தாக்குதல் ஆரம்பிக்கப்படும் என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (ம)



# ஊழல் வழக்கு

# முதல்வர் கெஜ்ரிவால் பிரதானமான சதிகாரர்

புதுடில்லி, ஏப். 27

புதுடில்லியில் இடம்பெற்ற மதுபான கொள்கை ஊழல் வழக்கில் முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலே பிரதான சதிகாரர் என உச்ச நீதிமன்றத்தில் அமுலாக்கத்துறை பதில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

டில்லி திஹார் சிறையில் நீதிமன்ற காவலில் உள்ள டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவால், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தன் மீதான கைது நடவடிக்கை சட்ட விரோதம் என்று கூறியிருந்தார். இதற்கு அமுலாக்கத்துறையால் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவிலேயே, மதுபான கொள்கை ஊழல் வழக்கில் முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலே பிரதான சதிகாரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# கரையொதுங்கித் தவிக்கும் திமிங்கிலங்கள்!

சிட்னி, ஏப். 27

அவுஸ்திரேலிய கடற்கரை ஒன்றில் நூற்றுக்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளன. அவற்றை மீண்டும் கடலுக்குள் விடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவின் தென்மேற்குப் பகுதியான டோபிஸ் இன்லெட்டில் 160 பைலட் திமிங்கிலங்கள் நேற்றுக்காலை கரை ஒதுங்கியுள்ளன. ஆபத்தான நிலையில் இருந்த 26 திமிங்கிலங்கள் கரையில் மூச்சு விடமுடியாமல் இறந்துவிட்டன. ஏனைய திமிங்கிலங்களை மீட்டு கடலில் விடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டோபிஸ் இன்லெட்டில் திமிங்கிலங்கள் கூட்டமாகப் பயணிப்பவை. அத்துடன், ஒரு திமிங்கிலத்தின் பயணப்பாதையை வைத்தே ஏனைய திமிங்கிலங்கள் பின்தொடரும் தன்மை மிக்கவை. ஆதலால், ஒருதிமிங்கிலம் கரையில் மாட்டியதைத் தொடர்ந்து மற்றைய திமிங்கிலங்களும் மாட்டிக் கொண்டிருக்கலாம் என்று கடல்சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



# காஸா மீதான தாக்குதல்: மலாலா கடும் கண்டனம்

லண்டன், ஏப். 27

காஸா மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலை கண்டித்துள்ள, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய், காஸாவில் வசிக்கும் பலஸ்தீனர்களுக்கான தனது ஆதரவில் உறுதியாக இருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். மலாலா, அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனுடன் இணைந்து தயாரித்த பிராட்வே மியூசிக்கலுக்கு பாகிஸ்தானில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது நிலைப்பாடு குறித்து வியாழக்கிழமை ருவிற்றர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "காஸா மக்களுக்கான எனது ஆதரவில் எந்தவித குழப்பமும் இருக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். போர் நிறுத்தம் அவசியம், அவசரம் என்று புரிந்து கொள்வதற்கு இன்னும் அதிகமான இறப்புகள், குண்டுவீசப்பட்ட பாடசாலைகள் மற்றும் பசியால் வாடும் குழந்தைகள் அவசியம் இல்லை. சர்வதேச சட்டங்களை மீறியதற்காகவும், போர்க் குற்றங்களுக்காகவும் இஸ்ரேலை நான் கண்டிக்கிறேன், தொடர்ந்து கண்டிப்பேன்" என்று மலாலா தெரிவித்துள்ளார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம்; திருமலையில் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 27

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்கும் விவகாரம் தொடர்பில் முக்கியமான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற உள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. வடக்கு-கிழக்கை சேர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளதாகவும் தமிழரசுக் கட்சியின் முக்கியமான தலைவர் உள்ளிட்ட மேலும் சிலரும் இந்தக்கலந்துரையாடலில் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஓ-100)


## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தக சாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 4949 683
077 077 6469


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிர்காமு உமாமகேஸ்வரன்**
(கதிர் வெல்டிங் வேக்ர்ஸ் உரிமையாளர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பத்தாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்..

திதி : சங்கடஹர சதுர்த்தி
மண்ணில் 29.12.1949 விண்ணில் 18.04.2014

2ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CS/54831) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1925



மறைவு 21 . 04 . 2024

### தயாளமணி கனகசிங்கம்

**(எட்டியாந்தோட்டை St.Mary தமிழ் வித்தியாலய முன்னாள் தலைமையாசிரியை)**

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும், 8ம் கட்டையடி தெல்லிப்பளை, ஐக்கிய அமெரிக்கா Rochester ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தயாளமணி கனகசிங்கம் கடந்த (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - நவமணி தம்பதியரின் அன்பு மகளும், ஆறுமுகம் - ராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்பு மனைவியும், கனகமணி (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், திலகமணி மற்றும் கமலமணி, சொக்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளகேசரி (ஐக்கிய அமெரிக்கா), கனகதயாளன் (ஐக்கிய அமெரிக்கா), கனகதயாவதி (ஐக்கிய அமெரிக்கா), கனகதயாபரி (ஜேர்மனி), காலஞ்சென்ற கனகதயாநந்தி (இலங்கை), கனகதயாம்பாள்(ஜேர்மனி), கனகதயாவாணி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவநிதி, வசந்தகுமாரி, தவக்குமார், சிறிஸ்கந்தராஜா, சிவானந்தராஜா, சிவலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதுன், சந்துன், மிலன், மிலானி, தாரகா, தருசன், தருமன், சுவாதி, வற்சன், வற்சாயினி, கரிஸ், கீர்த்தனா, நிர்மதா, சரணன், சகானா, காயத்திரி, நிக்கோல், வினோத், கிரிஸ், சாந்தினி, தர்சியா, ஆனா, லுக்காஸ், ஜனிபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லச்வின், சச்வின், தேச்வின், சௌமியா, வைஸ்ணவி, அக்ஷரா, தனஞ்சன், ராய்லி, அயான்ஸ், ரிசான், ராவண், யுகன், மீரா, நிலா, மகிலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய அமெரிக்கா (USA) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - கிளி - +1585 315 1024
மகன் - விமல் - +1585 520 6879

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1937



மறைவு 24 . 04 . 2024

### நவம் சின்னம்மா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவம் சின்னம்மா 24.04.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தையன் - பொன்னி தம்பதியரின் அன்பு மகளும், நவத்தின் அன்பு மனைவியும், மனோ, விமலா, சுகுணா, சுரேஸ், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பரி கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் படும்.

தகவல்: குடும்பத்தினர்.
075 447 0057

(cs.54841) (N-1)

## மரண அறிவித்தல்

மண்ணில் 13 . 08 . 1939



விண்ணில் 24 . 04 . 2024

### அமரர் சுப்பிரமணியம் நாகம்மா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரம் துணுக்காயை வசிப்பிடமாகவும் அணிஞ்சியன்குளம் மல்லாவியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் கடந்த (24.04.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதர் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், தனுஸ்கோடி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தனுஸ்கோடி சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கதிராசிப்பிள்ளை, அரியபுத்திரன், சேதுப்பிள்ளை, நாகலிங்கம், தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நல்லம்மா, நாகேந்திரன், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சத்தியசீலன் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்), ஞானசீலன் (சுவிஸ்), அன்பரசி (விநாயகபுரம்), மங்கையற்கரசி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (ஸ்கந்தபுரம்), காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், மற்றும் புவிநாயகன் (அதிபர் - மு/சிறாட்டிகுளம் அ.த.க.பா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைச்செல்வி (ஆசிரியர் - துணுக்காய் அ.த.க.பா), உமையரகுமாரி (சுவிஸ்), புண்ணியமூர்த்தி (விநாயகபுரம்), உதயகும்ார் (பிரான்ஸ்), திருமலர் (ஸ்கந்தபுரம்), தமிழ்ச்செல்வி ( ஆசிரியர், மு/தேறாங்கண்டல் அ.த.க.பா) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன், யோஜிதா (ஆசிரியர் - புனித தெரேசா பெண்கள் கல்லூரி), காலஞ்சென்ற ஆரூரன் மற்றும் ஆரண்யன், செந்துஷா, டசிந்தன், காலஞ்சென்ற தயாநந்தன், கஜந்தன் (அதிபர் - மு/மூன்றுமுறிப்பு அ.த.க.பா), சகிதா (ஆசிரியர் - மு/பாண்டியன்குளம் ம.வி), காலஞ்சென்ற கோகுலன், சோபிகா, ஜனனி, பிரியந், பிரதீஸ், யதுஷா, கிருஷா, ஜெனுஷா, கோபிசன், லோஜினா, கனிவிழி, பிரணவி, சுபாஜினி, குயின்சிகா (ஆசிரியர் - மு/விநாயகபுரம் அ.த.க.பா), டிசந்தன், டொறியன், விஜே ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரபி, அஸ்விகன், அக்சிகா, அக்ஷரா, அஸ்மிதா, கிஷானிகா, ருக்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் சந்தைவீதி அணிஞ்சியன் குளத்திலுள்ள அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று முற்பகல் 9.00 மணியளவில் அணிஞ்சியன்குளம் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தை வீதி, அணிஞ்சியன் குளம்,
யோகபுரம், மல்லாவி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 068 7756

(CS/28262) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.27

மறைந்த முதுபெரும் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, அவர் எழுதிய இரசனைக் குறிப்புகள், சிறுகதைகள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலைக் கிராம அலுவலர் சோ.பரமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். மூத்த எழுத்தாளர் அ. யேசுராசா விசேட உரையையும், அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் நூல் வெளியீட்டுரையையும், மூத்த எழுத்தாளர் வடகோவை வரதராஜன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் ஆகியோர் கருத்துரைகளையும், திருமதி புனிதவதி சண்முகலிங்கன் ஏற்புரையும், நன்றியுரையும் ஆற்றவுள்ளனர். (ஒ-66)

# பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவச் சங்கப் பொதுக் கூட்டம், கூட்டுறவு மருத்துவமனையின் மாநாட்டு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது சங்கத் தலைவர் ஆசை சுதன் தலைமையில் இடம்பெறவுள்ள பொதுக் கூட்டத்தில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் பிரதம விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.கௌசிகா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

# வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 27

வட்டுமூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 91 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம், சங்கத் தலைவர் த.நாராயணன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேலும் நிர்வாக அறிக்கை சமர்ப்பித்தல், புதிய அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல், மூத்த அங்கத்தவர்களைக் கௌரவித்தல், தேவாஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கல் ஆகியன இடம்பெறுமென சங்கச்செயலாளர் ப.அருள்ராசன் அறிவித்துள்ளார். (ப)


உ
சிவமயம்

## தசாக – கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் குரோதி வருடம் சித்திரை மாதம் 10 ஆம் நாள் (23.04.2024)
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையார்

அமரர்
வைதிககிரியாரத்னா
**சோமசுந்தரக் குருக்கள் வரதராஜசர்மா**
(அச்சுக்கூட ஐயா)

அவர்களின் ஆத்மாசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

சித்திரை மாதம் 19ம் நாள் 02.05.2024 வியாழக்கிழமை - தசாகம் காலை 10.00 மணியளவில்
சித்திரை மாதம் 22 ம் நாள் 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை - கிருஹயக்ஞம் (சமாராதனை)

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும், கிருஹயக்ஞம் (மதியபோசனம்) நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கத் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

21, விதானையார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS 00341) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 15.03.1933 — மறைவு 22.04.2024

**திருமதி புஷ்பமிர்தம் மனோசக்தி சபாரத்தினம்**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், யாழ். காட்டுக் கந்தோர் ஒழுங்கை, ஆஸ்திரேலியா, மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. புஷ்பமிர்தம் மனோசக்தி சபாரத்தினம் (பபா) ஏப்ரல் 22, 2024 அன்று கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் மறைந்த தம்பையா சபாரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அமிர்தா (ஆஸ்திரேலியா), சாரதா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிறீதரன் (ஐக்கிய இராச்சியம்), வனிதா (ஐக்கிய இராச்சியம்), இரஞ்சனா (ஆஸ்திரேலியா), நரேந்திரன் (ஜேர்மனி) ரோஷனா (ஆஸ்திரேலியா) மோகனா (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், ஆனந்தன், ஷிராணி, இரஞ்சன், கஜன், ஜெயா, ராஜீவ், லோகன் ஆகியோரின் மாமியாரும், பதின்மூவரின் அன்பும் அக்கறையும் கொண்ட பேர்த்தியும், ஐவரின் பூட்டியும், சுண்டிகுளியை சேர்ந்த காலஞ்சென்ற புஷ்பம், என்.எஸ்.சிதம்பரப்பிள்ளை மற்றும் சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான புஸ்பராசா, புஷ்பராணி - திருநாவுக்கரசு (ராணி) மற்றும் புஷ்பாதேவி சிதம்பரப்பிள்ளை (ரஞ்சி), காலஞ்சென்ற புஷ்பராகம் - அழகரத்தினம் (மனோ), காலஞ்சென்ற புஷ்பாலயம் - சிவகுருநாதன், சரோஜனி - சுப்பிரமணியம் (பிள்ளை - கனடா), பூவேந்திரன் (இந்திரன்- கனடா) மற்றும் காலஞ்சென்ற புவனேந்திரன் சிதம்பரப்பிள்ளை (ராஜன் - அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மங்கை - முத்தையா, காலஞ்சென்ற, நடராஜா, காலஞ்சென்ற பராசக்தி - முத்தையா, காலஞ்சென்ற இரத்தினசபாபதி (குஞ்சையா) சர்வலட்சுமி (குஞ்சம்மா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் (591, காலி வீதி, கல்கிசை) இன்று (27.04.2024) சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை 2.30 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
சபாரத்தினம் குடும்பத்தினர்

Contact : + 94773052274 ( Loganathan / son - in- law )
Ranjana : daughter + 94410267201 | Email: kestrel06@outlook.com

## பெயர் மாற்றம்

முருகன் கோவிலடி வீதி, துணவி, சங்கரத்தையில் வசிக்கும் **பாலசிங்கம் விகிஸ்ணதாஸ்** ஆகிய நான் எனது பெயரை **பாலசிங்கம் விஷ்ணு** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பாலசிங்கம் விஷ்ணு** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

பாலசிங்கம் விஷ்ணு

(CS/54840) J-1

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 . 10 . 1924 — மறைவு 19 . 04 . 2014

அமரர்
திருமதி **மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை**
(சின்னம்மா)
திதி: சங்கடஹர சதுர்த்தி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பத்தாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

இல. 140 பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
ம.இராஜநாயகம் குடும்பத்தினர்

(CS/336) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு 09 . 09 . 1955 — உதிர்வு 25 . 04 . 2024

**பசுபதி கனகரத்தினம்**
(முன்னாள் பிரதேச சபை பணியாளர்)

முகமாலையைப் பிறப்பிடமாகவும், பெரியபளை பளையை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி கனகரத்தினம் நேற்று முன்தினம் (25.04.2024) வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் பசுபதி - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும், சுப்பிரமணியம் - இராசமலர் தம்பதியரின் மருமகனும், தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வரத்தினம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அரியரத்தினம் (முன்னாள் மாகாணசபை உறுப்பினர்), இராசம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லக்ஷிகா, ஜனுசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதிகாந்தின் அன்பு மாமனாரும், ஜாஸ்வியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பகாமம் மலயான் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியபளை,
பளை.

தகவல்:
குடும்பத்தினர்

(CR/42291) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட பிரஜைகளுக்கு

# 15 வீத வட்டிக்காக ரூ.40 பில். தேவை!

கொழும்பு, ஏப். 27

**சிரேஷ்ட பிரஜைகளுக்கான வட்டியை 15 வீதமாக வழங்கவேண்டுமானால் அரசாங்கம் மேலும் 40 பில்லியன் ரூபாவை அதற்காகச் செலுத்த நேரிடும். அரசாங்கத்தின் தற்போதைய நிதி நிலைமையைக் கவனத்தில் கொண்டு அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தின அமர்வில் கலந்துகொண்டபோதே நிதி இராஜாங்க அமைச்சர் இந்தக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்கி வட்டி வீதம் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டு வங்கி வைப்புக்கான வட்டியை 16 வீதத்திலிருந்து தற்போது தனி இலக்கத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். வைப்புகளுக்கான வட்டியைக் குறைப்பது இயல்பாக இடம்பெறுகின்ற ஒன்று. அது தொடர்பில் சிரேஷ்ட பிரஜைகளும் சில பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என்பதை ஏற்கிறோம்.

சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புகளுக்கு வட்டி அதிகரிக்கவேண்டியது அவசியம். எனினும் அதற்கான நிதியை அரசாங்கமே ஒதுக்கவேண்டியுள்ளது. இவ்வாறான விடயங்களுக்காக ஏற்கனவே வங்கிக்கு அரசாங்கம் வழங்கவேண்டிய நிலுவை இன்னும் தொடர்கிறது. 15 வீத வட்டியை வழங்க வேண்டுமானால் சுமார் 40 பில்லியன் ரூபாவை அரசாங்கம் அதற்காக ஒதுக்கவேண்டியுள்ளது - என்றார். (ம)

## மோ.சைக்கிள் விபத்து: இருவருக்குப் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடமராட்சி, குஞ்சர்கடை சந்திப்பகுதியில் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இருவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. விபத்துத் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)

குழந்தையுடன் சென்ற பெண்ணிடம்

## நகைகளைக் களவாடி மோ.சைக்கிள் பறிப்பு!

கைவரிசை காட்டியோர் சிக்கினர்


வவுனியா, ஏப். 27

வவுனியா கடவுச் சீட்டு அலுவலகத்துக்குச் சென்ற பெண்ணிடம் கைவரிசை காட்டி, நகைகளையும் மோட்டார் சைக்கிளையும் களவாடிய 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 17ஆம் திகதி அதிகாலை பெண் ஒருவர் தனது குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, வீதியில் முகத்தை மூடி துணிகளால் கட்டியபடி நின்ற மூன்று இளைஞர்கள் அவரை வழிமறித்து குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகைகளை அபகரித்ததுடன், மோட்டார் சைக்கிளையும் பறித்து ச்சென்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய 34 மற்றும் 35 வயதுடைய 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அபகரிக்கப்பட்ட மூன்றரைப் பவுண் நகைகள் உருக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள நகைகடையிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளன. பறித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் கனகராயன்குளத்தில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இதைவிட இரண்டு பென்ரன் மற்றும் மடிக்கணினி என்பனவும் மூவரிடமிருந்து மேலதிகமாக மீட்கப்பட்டுள்ளன. இவை கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து திருடப்பட்டவை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ-ஒ-110)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் கலாசார அதிகாரசபையும் இணைந்து ஏற்பாடு செய்த, பிரதேச கலாமன்றங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் ஆகியவற்றுக்கிடையிலான சித்திரைத்தூறல் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. (ப-9)



மூன்றுமுறிப்பு சென்சுலான் முன்பள்ளி யில் தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.மோர்சிபவன் மற்றும் கிராம உத்தியோகத்தர் சி.சரண்ஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (எ-75)

ஜே/90 அரியாலை கிழக்கு, நாவலடிக் கிராமத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் பழைய உதயநிலா முன்பள்ளி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. (ப-66)





தென்மராட்சிப் பிரதேச செயலக பன்னிரு மாத விளக்கு வேலைத்திட்டத்தின் புத்தாண்டு விளையாட்டு விழா கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்கத்தாவுக்கு

# சொந்தமண்ணில் 'மரண அடி'

அதிக சிக்ஸர்கள் பதிவான ஆட்டம்

**பஞ்சாப் அணி மிகச்சிறப்பாக மீண்டெழுந்து கொல்கத்தா அணிக்கு அதன் சொந்த மண்ணிலேயே சமாதி கட்டியது.**



262 என்ற பிரமாண்ட வெற்றியிலக்கை 8 பந்துகள் மீதமிருக்கையில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து பெற்று, 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் தொடர்தோல்வியைச் சந்தித்த பெங்களூர் அணி, அதிரடியில் கலக்கிக் கொண்டு வெற்றிப் பாதையில் பயணித்த சன்ரைஸஸ் அணியைச் சரித்தது. இந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தில் தொடர் தோல்விகளில் துவண்டிருந்த பஞ்சாப் அணி, புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்திலும் நிகர ஓட்ட சராசரியில் முதலிடத்திலும் இருந்த கொல்கத்தா அணியை ஊதித்தள்ளியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தேர்வு செய்தது பஞ்சாப். கொல்கத்தா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களைப்பெற்றது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான சோல்ட் நரைன் இணையின் அதிரடியாலேயே இந்த ஓட்டஎண்ணிக்கையை அந்த அணி பெற்றது. சோல்ட் 37 பந்துகளில் 75 ஓட்டங்களையும், நரைன் 32 பந்துகளில் 71 ஓட்டங்களையும் அதிகபட்சமாகவும் அதிரடியாகவும் பெற்றுக்கொடுத்தனர். அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் 10 பந்துகளில் 28 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலளித்து ஆடிய பஞ்சாப் அணி ஆரம்பத்திலிருந்தே கொல்கத்தாவின் பந்துகளை பறக்கவிட்டது. பிரப்ஸ்மரன் சிங் 20 பந்துகளில் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜொனி பெயஸ்ரோ மறுமுனையில் வெளுத்துவாங்கினார். சச்சாங் சிங் நுழைந்த வேகத்தில் கொல்கத்தா பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்தார். பெயஸ்ரோ 45 பந்துகளில் சதம் கடக்க சச்சாங் சிங் 23 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இறுதியில் பஞ்சாப் அணி கொல்கத்தாவை பஞ்சாகப் பறக்கவிட்டு வெற்றியைச் சுவைத்தது. (ஒ-5)



## வி.கழகத்துக்கு சரவணபவனால் உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சில்லாலை வேளாங்கண்ணி விளையாட்டு கழகத்துக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் விளையாட்டு உபகரணங்கள் நேற்று மாலை வழங்கி வைக்கப்பட்டன. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவை வழங்கி வைக்கப்பட்டன. (அ-ஒ-125)

இஸ்ரேலின் குண்டுத்தாக்குதல்

# உயிரிழந்த கர்ப்பிணி வயிற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட சிசு சாவு!

காஸாவில் இஸ்ரேலின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட சப்ரீன் என்ற பெண்ணின் வயிற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்ட 7 மாதக் குழந்தை நேற்று உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி நள்ளிரவுக்கு சற்று முன்பாக அவர்களது வீட்டின் மீது குண்டு வீழ்ந்து வெடித்ததில் சப்ரீனின் கணவர் மூன்று வயது மகள் ஆகியோர் கொல்லப்பட்டனர். சப்ரீன் கடும் காயங்களுக்கு உள்ளானார். மீட்பு பணியாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்த போது சப்ரீனின் வயிற்றில் குழந்தை உயிருடன் இருப்பதை அறிந்து கொண்டனர். உடனடியாக சப்ரீனை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்று அங்கு அவருக்கு சிசேரியன் மேற்கொள்ளப்பட்டது. குழந்தையை மீட்ட மருத்துவர்களால் தாயைக் காப்பாற்ற முடியவில்லை. குழந்தை மூச்சு விட சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. குழந்தைக்குச் செயற்கைச்சுவாசம் அளிக்கப்பட்டது.

1.4 கிலோகிராம் எடையுள்ள இந்தக்குழந்தை கண்ணாடிப்பேழையில் வைத்து பராமரித்து வந்த நிலையில் நேற்றைய தினம் குழந்தை உயிரிழந்துவிட்டது. (ஒ-6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1947



மறைவு 26 . 04 . 2024

### தம்பிஐயா தங்கரத்தினம் (ரதி)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா தங்கரத்தினம் (ரதி) அவர்கள் நேற்று (26.04.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (சிங்கர்) - பூமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசா - பாலாமணி தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் சந்தனலிங்கம், மகாலிங்கம் (சுவிஸ்), அமரர் குணரத்தினம் (சின்னமணி - ஏழாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உ.கோசலாதேவி (சுவிஸ்), த.வாமதேவன் (அதிபர், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை), ஸ்ரீ.கௌசல்யாதேவி, ப.மீராதேவி (நெதர்லாந்து), சு.கௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாகாந்தன் (சுவிஸ்), வா.தேன்மொழி (ஆசிரியை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஸ்ரீகுலராஜா (பேபி), பரமலிங்கம் (நெதர்லாந்து), சுதன் (ஐயனார் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஜங்கரன் - ரமீலா (சுவிஸ்), தனுசன் - லாவண்ஜா (சுவிஸ்), காருண்ஜா (சுவிஸ்), ரங்கேஸ்வரன் - சனுசா (பிரான்ஸ்), நிஷனன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம் B.Sc), பதூஷனன் (யாழ்.பல்கலைக்கழகம்), வா.தசாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி 2025 A/L), வா.ரிஷபன் (யாழ். இந்துக் கல்லூரி, 2024 O/L), வா.யாழவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.நிருஷன் (நெதர்லாந்து), ப.அஸ்வினி (நெதர்லாந்து), ப.சுபர்ணன் (நெதர்லாந்து), சு.பிருந்தாவனா (உடுவில் மகளிர் கல்லூரி 2024 O/L), சு.மிதுர்ஷிகா (உடுவில் மகளிர் கல்லூரி), சு.அட்சயன் (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், த.அமிர்தாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (28.04.2024) முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ரதி கோட்டம்,**
**முதலியார் வளவு,**
**சுன்னாகம்.**
**077 618 4772** (CS 00338) 5-1

**தகவல்:**
**த.வாமதேவன்**
**அதிபர், யா/ தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி**
**தெல்லிப்பழை.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 04 . 1950



மறைவு 26 . 04 . 2024

### அமரர் மருதமுத்து அங்கமுத்து

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட மருதமுத்து அங்கமுத்து நேற்று (26.04.2024) வெள்ளிக்கிழமை காலமானார். (உரிமையாளர் வைஸ்னவி புடவையகம்).

அன்னார் காலஞ்சென்ற மருதமுத்து-வீரம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை-மனோன்மணி தம்பதியின் அன்பு மருமகனும் இரட்ணியநாயகி (சந்திரா) அவர்களின் பாசமிகு கணவரும் அமரர் பேரின்பமூர்த்தி (இன்பம்), மேனகா (வேம்படி ஓய்வு நிலை பிரதி அதிபர்), மலர்விழி (கனடா), மதிகுமார் (கனடா), காலஞ்சென்ற உதயகுமார், ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயபாலன், யோகரஞ்சிதம் ஆகியோரின் சகலனும், வைஸ்னவி (கனடா), தியானா (கனடா), ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் மகிஷாவின் (கனடா), அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மருதமுத்து மாரிமுத்துவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (28.04.2024) காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**மலர்விழி : + (647) 606 6436**
**மதிகுமார் : + (647) 206 6436**
**மேனகா : 076 601 5288**
**மணிமாலா : 076 001 2448**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 344) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

வடக்கிலுள்ள 5 மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதம செயலர் அலுவலகம் ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கான பதில்களிலிருந்து இவை தெரியவந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஒருவர் உத்தியோகபூர்வமாக பதவி விலகியதுடன் 21 பேர் உத்தியோகப்பற்றற்ற முறையில் பதவி விலகியுள்ளனர். மேலும் 5 ஆண்டுகால விடுமுறைக்கு 99 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில் 79 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர் உத்தியோகபூர்வமாக விலகியுள்ளதுடன் 7 பேர் உத்தியோகப்பற்றற்ற முறையில் விலகியுள்ளனர். 5 ஆண்டுகால விடுமுறைக்கு 41 பேர் விண்ணப்பித்த நிலையில் 14 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 ஆண்டுகால விடுமுறைக்கு 28பேர் விண்ணப்பித்த நிலையில் அவர்களில் 22 பேருக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 2 பேர் உத்தியோகபூர்வமாக பதவி விலகியுள்ளனர். 5 ஆண்டுகால விடுமுறைக்கு விண்ணப்பித்த 16 பேருக்கும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 3 பேர் உத்தியோகபூர்வமாக விலகியுள்ளதுடன் 8பேர் உத்தியோகப்பற்றற்ற முறையில் விலகியுள்ளனர். 17 பேர் 5 ஆண்டுகால விடுமுறைக்கு விண்ணப்பித்த நிலையில் அவர்களில் 13 பேருக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனைவிட, வடக்கு மாகாண சபைக்குட்பட்ட திணைக்களங்களிலிருந்து 5 ஆண்டுகால விடுமுறைக்கு 625பேர் விண்ணப்பித்த நிலையில் 576 பேருக்கு அனும்தி வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## தேர்தல்...

கட்சிகளும் தமக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உட்பட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அரசால் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள், இடைநிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பித்தல், மே தினக் கூட்டம், தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

"ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன கட்சி என்பன, தமது கட்சி தனியாகவே மே தினக் கூட்டங்களை நடத்தும் என அறிவித்துள்ளன. ஏனைய சில கட்சிகளும் தமது வேலைத்திட்டங்கள் பற்றி விவரித்துள்ளன. விரைவில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும் என்பதும் உறுதிப்படுத்தப்படவுள்ளது. இத்தேர்தலில் களமிறங்க உத்தேசித்துள்ள தமக்கு அனைவரும் ஆதரவு நல்கவேண்டும்" என ஜனாதிபதி கோரியுள்ளார். ஆளுங்கட்சியில் உள்ள சிறுபான்மையினக் கட்சிகள் ஜனாதிபதிக்கான ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளன. எனினும், சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. (அ-ஒ-44)

## ட்ரோன்...

றுச் செய்கைக்கான கிருமிநாசினி விசிறும் நடவடிக்கையே இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையர், விவசாய மாகாண பிரதிப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கமநல, விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து சிறப்பித்தனர். (அ-ஒ-56)

## மத்தள....

சரவை அனுமதியளித்துள்ளது.

சீனாவின் நிதி உதவியில் மஹிந்த ராஜபக்ச காலத்தில் அமைக்கப்பட்ட இந்த விமான நிலையத்தால் வருமானத்தைவிட செலவு பலமடங்கு அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-6)

## முறிகண்டியில்...

இதன்போது 'கப் 'வாகனம் திடீரென இயங்காமல் நின்றுள்ளது. அப்போது எதிரே வந்த வாகனம் நேருக்கு நேர் மோதினால் விபத்துக்குள்ளாகிவிடும் எனும் அச்சத்தில் அதைத் தடுக்கும் நோக்குடன் பாரஊர்தியை சாரதி செலுத்த முற்பட்டுள்ளார்.

இதன்போது, கப் வாகனத்தில் பார ஊர்தி மோதியதில் அதில் பயணித்த இரண்டு சிப்பாய்கள் வீதியில் விழுந்துள்ளனர். அதில் ஒருவர் மேல் பார ஊர்தி ஏறியதில் சம்பவ இடத்தில் அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை- சம்பவத்தில் காயமடைந்த 7 பேரில் இருவர் இரணைமடுவில் உள்ள இராணுவ மருத்துவமனையிலும், மற்றைய நால்வரும் கிளிநொச்சி மருத்துவமனையிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர். (அ-ஒ-113-555)

## எதிர்ப்புப்

போது விசேட அதிரடிப்படையால் அவை கைப்பற்றப்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் 3 நாள்கள் நடைபெற்றன. இதன்போது இவை கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-6)

## பெயரில்...

பயன்படுத்தி க.பொ.த. சாதாரண தர பரீட்சை மாணவர்களின் அனுமதி அட்டைக்கு கையொப்பம் இட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயர் 4 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் திருத்துமாறு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கடிதம் அனுப்பப்படவுள்ளது. இந்தப் பெயர் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் அறிக்கையும் கோரப்பட்டுள்ளது. 'கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை' என்ற பெயரே உத்தியோகபூர்வமானது" - என்றார். (அ-ஒ-125)

## முகமாலையில்...

மாவட்ட நீதிவான் இஸ்மாத் ஜெமில் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தப்பகுதியில் நேற்றுமுன்தினம் கண்ணிவெடி அகற்றப்படும்போது மனித எச்சங்களுடன் கூடிய ஆடை கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக பளை பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதையடுத்து நீதிவான் எச்சம் மீட்கப்பட்ட இடத்தை நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

கண்ணிவெடி அகற்றும் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறும், கிடைக்கப்பெறுகின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாக பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லுமாறும், தற்போது கிடைக்கப்பெற்ற மனித எச்சங்களை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பிவைக்குமாறும் நாளைமறுதினம் திங்கட்கிழமை சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிடுவதாகவும் நீதிவான் தெரிவித்துள்ளார். (அ-ஒ-113)

## குடும்பத்...

பப் பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். புனித நகர், கற்கோவளத்தைச் சேர்ந்த சுகதாஸ் ரஞ்சனி (வயது -36) என்ற 5 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து கடந்த 8 ஆம் திகதி தவறான முடிவு எடுத்துள்ளார். இருப்பினும் அவர் காப்பாற்றப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார். எனினும் மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டதை அடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் அவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி ச. சிவராஜா நேற்று வெள்ளிக்கிழமை இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-100)

# தந்தை செல்வா நினைவுதினம் உணர்வுபூர்வமாக கடைப்பிடிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 27

தந்தை செல்வாவின் 47-ஆவது ஆண்டு நினைவேந்தல் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் தூபியில் உணர்வுபூர்வமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், முன்னாள் பேராயர் ஜெபநேசன் தலைமையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு தந்தை செல்வாவின் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகச் சுடரும் ஏற்றப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளைத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ-ஒ-125)

# நல்லிணக்க அடிப்படையில் தமிழக மீனவர்கள் விடுவிப்பு

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வந்தமை உறுதிசெய்யப்பட்டதை அடுத்து சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களான படகோட்டிகள் மூவரையும் நல்லிணக்க அடிப்படையில் விடுவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இரண்டு படகோட்டிகளுக்கு தலா ஆறு மாத கால சிறைத் தண்டனை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தது.

பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி அதே கடற்பரப்பில் வைத்து ஒரு படகுடன் கைது செய்யப்பட்டிருந்த படகோட்டிக்கும் ஆறு மாத கால சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டிருந்த மீனவர்கள் அனைவரும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில் ஜி.பி.எஸ். கருவிகள் கைவசம் இருந்த நிலையிலும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதன் அடிப்படையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இவ் வழக்கின் வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாசன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இந்திய மீனவர்கள் சார்பில் இந்தியத் துணைத் தூதரகம் நியமித்த சட்டத்தரணி அருள்பிரகாசம் நிரோஜன் முன்னிலையாகியிருந்தார். நீரியல் வளத்திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணி முன்னிலையாகியிருந்தார். வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி நல்லிணக்க அடிப்படையில் மூன்று மீனவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். (அ-ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்துக் கலைத்தோரை அணைப்பதற்கு முடிவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கட்சியிலிருந்து எதேச்சதிகாரமாக நீக்கப்பட்டவர்களை கட்சியில் மீண்டும் இணைத்துக்கொள்வதற்குசிறிலங்காசுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சு.க.வின் பதில் பொதுச் செயலர் தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா உள்ளிட்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

சுதந்திரக்கட்சியின் அரசியல் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் பதில் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் கூடியது. இதன்போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

## விளையாட்டு விழா

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் நல்லூர்ப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து முன்னெடுத்த, 'ஸ்மார்ட் யுத்' புத்தாண்டு விளையாட்டு விழா, அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

## நினைவரங்கு

அரங்க, சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் கிராமிய உழைப்பாளர் சங்க நிறுவுநர்களில் ஒருவருமான சரவணபாலசிங்கத்தின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு, உரும்பிராய் இந்துக் கல்லூரி அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

## நினைவேந்தல்

வடமராட்சி ஊடக இல்லத்தினின் ஏற்பாட்டில், ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, வி.எம்.வீதி. பருத்தித்துறையில் அமைந்துள்ள வடமராட்சி ஊடக இல்ல அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் தாவடியிலுள்ள அரிசி ஆலை ஒன்றிற்கு கனரக வாகன சாரதி தேவை.

தொடர்பு:- 076 096 9728

(CS/54826) J-1

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல இனத்தவர்களுக்குமான வரண்கள் உண்டு. செவ்வாய் குற்றம் உள்ளது, செவ்வாய் இல்லாதது. சூரிய, செவ்வாய் குற்றம் உள்ளது குற்றம் இல்லாதது அரச உத்தியோகம், தனியார் உள்நாடு வெளிநாடு சகலருக்குமான மணமக்கள் கைவசம் உண்டு. அனைத்து திருமணங்களும் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு:

வி. ஜெயந்தி T.P: 077 9733 183

## கட்டடம் வாடகைக்கு விடப்படும்

**யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள 5400(90x60) சதுரஅடி விஸ்தீரணமுடைய கட்டடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.**

பெறவிரும்புவோர் கட்டடத்தைப் பார்வையிட்டு விண்ணப்ப படிவங்களை பெற்று 04.05.2024 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 952 5331, 077 174 3710

(CS/335) J-1

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

**குறிப்பு:** இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- ➤ சமையல் உதவியாளர்
- ➤ துப்புரவு பணியாளர் (Room Cleaners)
- ➤ சமையலாளர்
- ➤ உணவு பரிமாறுபவர்
- ➤ பாத்திரம் கழுவும் பணியாளர்

40 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. **ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்பு:- 076 012 0283

(CS/54838) J-1

## வேலைக்கு ஆட்கள் உடனடித் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் மின்சார ஒப்பந்த தாரருக்கு வேலை ஆட்கள் தேவை.

01. கிரேன் ரைவர் (பூம்ரக் ஒப்பரேற்றர்)
02. மின்கம்பி இணைப்பாளர் (லைனிங் மன்)
03. கூலித் தொழிலாளி (லேபர்)

தொடர்புகளுக்கு:

074 2066 259

(CS 343) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி பராசக்தி நடேசபிள்ளை

நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி நடேசபிள்ளை அவர்கள் நேற்று (26.04.2024) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - ரூபவதி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சன்ற முருகேசு - கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், நடேசபிள்ளை (கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும், உதயகுமாரன் (கோபுரம் சில்க்ஸ்), சசிக்குமார் (பிரான்ஸ்), கஜேந்திரகுமார் (THE HALO TRUST SRILANKA, முன்னாள் வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அஜந்தா (கோபுரம் சில்க்ஸ்), நிஷாந்தி (பிரான்ஸ்), சுதா (சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு மாமியாரும், விக்கினேஸ்வரன், கோமளாதேவி, பவானந்தவதி, இரத்தினசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனகேஸ்வரி, கந்தையா, இராசரத்தினம், சரஸ்வதி மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், தங்கலட்சுமி, மலர்மணி, தாமோதரம் பிள்ளை, தவராசா, சின்னராஜா, பரமானந்தம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கஜனிகா, சௌமிகா, அஜய், சோபியா, சாரணி, சயானா, மதுஷன், அபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், திருமாறன், தனுஷியா, உதயன், அனுஷியா, கஜீவன், நிரோஷிகா, காலஞ்சென்ற தர்ஷியா மற்றும் துஷாந், அஜித்தா, தரணியா, கேதீஸ்வரன், கவிதா, திருக்குமார், மதிவதனி, விஜிதரன், கல்பனா, வடிவாசன் குகாநந்தி, கோபிநாத், சுஜானி, சதானி ஆகியோரின் பாசமிகு அத்தையும் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை விநாயகர் வீதி நல்லூர் வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS) A-1

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் நாகமணி சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்)

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் 31 ம் நாள் நினைவஞ்சலியும் மதிய போசன நிகழ்வும் எதிர்வரும் 29.04.2024 ம் திகதி திங்கட்கிழமை அன்று சுதுமலை குபேர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. எனவே இவ் அழைப்பை தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**077 472 3504**

(CS 342) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.